**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி.எண்: 101/2015**

**அ.சா : 1**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 15.11.2024.**

**1,2,4 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனுதாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**<u>சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் நான் பர்கூரில் இருந்தேன். அழைப்பேசியில் சம்பவம் குறித்து தகவல் சொன்ன நபர் யார் என்று எனக்கு தெரியாது. புகாரிலும், வாக்குமூலத்திலும் அந்த அழைப்பேசி என்னை நான் குறிப்பிடவில்லை. தகவல் கிடைத்து 1/2 மணி நேரத்தில் நான் வங்கிக்கு வந்துவிட்டேன். நான் சம்பவ இடத்திற்க்கு செல்லும்போது எனது சக பக்கத்து கிளை மேலாளர்கள் 2 பேரும், காவல் ஆய்வாளரும் இருந்தார்கள். சம்பவ இடத்தில் அதிகாலை 2 மணி முதல் மதியம் 12.00 மணிவரை இருந்தேன். புகாரை அன்றைய தினமே காலை 10.00 மணியளவில் கொடுத்தேன். வங்கிக்கு வந்த பொதுமக்கள் காலையில் வந்தார்கள். எங்கள் ATM–ல் இருந்து பணம் எடுக்கப்படவில்லை ஆனால் அந்த இயந்திரம் சேதப்படுத்தப்பட்டு இருந்தது. ATM இயந்திரத்தின் Scrren கண்ணாடி உடைக்கப்பட்டு இருந்தது. மேலும் பணம் வைக்கப்படும் இடம் சேதப்படுத்தப்பட்டு இருந்தது. பணம் வைக்கப்படும் இடம் சேதப்பட்டு இருந்ததாக புகாரில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் ATM இயந்திரம் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளேன். ATM உள்ள இடம் கடைகளும், பொதுமக்களும் உள்ள இடம் என்றால் சரிதான். ATM ஆனது வங்கியின் முன்புறமாக உள்ளது. வங்கியில் இருந்து பார்க்கும் தொலைவில் தான் உள்ளது. ATM இயந்திரத்திற்க்கு பாதுகாவலர் கிடையாது. வங்கிக்கும் பாதுகாவலர் கிடையாது. ATM சேதப்படுத்தப்பட்டதற்க்கான புகைப்படம் கொடுத்தேனா என்றால் போலீசாரே எடுத்துக் கொண்டார்கள். சம்பவம் எந்த

குறிப்பிட்ட நேரத்தில் நடைப்பெற்றது என்று என்னால் சொல்ல இயலாது. சம்பவம் யாரால் ஏற்ப்பட்டது என்றும் என்னால் சொல்ல இயலாது. ATM இயந்திரம் உள்ள இடத்திற்க்கு நான் செல்லும்போது அங்கு யாரும்இல்லை. மீண்டும் காவல் துறையினர் அன்றைய தினமே விசாரித்தார்கள். வரைப்படம் மற்றும் பார்வை மகஜர் எங்களது வங்கியில் வைத்து தயார் செய்து கையெழுத்து வாங்கினார்கள். வரைப்படத்தில் என்ன உள்ளதோ அதை பார்த்த பின்னர் தான் கையெழுத்து செய்தோம். பார்வை மகஜர் வரைப்படம் வங்கியில் வைத்து தயார் செய்தார்கள் என்றும் சம்பவ இடத்தில் தயாரித்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எவ்வித சம்பவமும் நடைப்பெறவில்லை என்றும் ஏற்கனவே உடைந்த ATM இயந்திரத்தை உயர் அதிகாரிகளிடம் கணக்கு காட்ட வேண்டும் என்பதற்க்காக அதற்க்கா பொய்யாக புகார் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்க்கும், எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.